## ரெங்க சமுத்திரத்தில்

# உங்களுடன் ஸ்டாலின் திட்ட சிறப்பு முகாம்: ராஜா எம்எல்ஏ பங்கேற்பு



**சங்கரன்கோவில். ஆக.02-**

தென்காசி வடக்கு மாவட்டம் சங்கரன்கோவில் சட்டமன்ற தொகுதி மேலநீலித நல்லூர் கிழக்கு ஒன்றியம் மகேந்திரவாடி மற்றும் உசிலங்குளம் ஊராட்சிக்கு உட்பட்ட கிராமங்களுக்கு ரெங்கசமுத்திரம் சேவை மையத்தில் உங்களுடன் ஸ்டாலின் திட்ட முகாம் நடந்தது.

ஒன்றிய செயலாளர் பெரியதுரை தலைமையில் நடந்த இந்த முகாமில் தென்காசி வடக்கு மாவட்ட திமுக செயலாளர் ராஜா எம்எல்ஏ கலந்துகொண்டு பொது மக்களிடம் மனுக்களை பெற்று கொண்டார்.

தொடர்ந்து ,மகளிர் உரிமைத்தொகை அனைத்து வித கோரிக்கைகளும் உடனடியாக நடவடிக்கை எடுக்கப்படும் என தெரிவித்தார். இதில் மாவட்ட சிறுபான்மையினர் நல உரிமை பிரிவு தலைவர் மரியலூயிஸ் பாண்டியன், மாவட்ட ஆதிதிராவிட நல குழு தலைவர் ராஜ் என்ற கருப்பசாமி,மாவட்ட இலக்கிய அணி துணை அமைப்பாளர் பூலியூர் கணேசன், மகேந்திரவாடி ஊராட்சி மன்ற தலைவர் செல்வி, கிளை செயலாளர்கள் அந்தோணிராஜ், பொன்ராஜ், பாபு, ராஜேந்திரன், பால்ராஜ், அரசு ஒப்பந்ததாரர் மாடசாமி ஒன்றிய விளையாட்டு மேம்பாட்டு அணி துணை அமைப்பாளர் கோட்டை பாண்டி, சரவணன், சீனு, ஜெயக்குமார் , பாலாஜி மற்றும் பொதுமக்கள், அரசு அதிகாரிகள் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.

## தென்காசி மாவட்டத்தில்

# ஆடித்தபசு திருவிழாவினை முன்னிட்டு வரும் 7ம் தேதி உள்ளூர் விடுமுறை : கலெக்டர் அறிவிப்பு

**தென்காசி ஆக.02:**

தென்காசி மாவட்டத்தில் ஆடித்தபசு திருவிழாவினை முன்னிட்டு 07.08.2025 அன்று தென்காசி மாவட்டத்தில் உள்ள பள்ளி, கல்லூரிகளில் நடைபெற்று வரும் முக்கியத் தேர்வுகளுக்கு இடையூறு ஏற்படாத வகையில் அனைத்து மாநில அரசு அலுவலகங்களுக்கும், நிறுவனங்களுக்கும் உள்ளூர் விடுமுறை நாளாக அறிவிக்கப்பட்டுள்ளது மாவட்ட ஆட்சித்தலைவர் ஏ.கே.கமல்கிஷோர் தெரிவித்தார்.

தென்காசி மாவட்டம், சங்கரன்கோவில் வட்டம் மற்றும் நகரம், அ/மி சங்கரநாராயணசாமி திருக்கோவில் ஆடித்தபசு திருவிழா எதிர்வரும் 07.08.2025 (வியாழன்) அன்று நடைபெற இருப்பதால் அரசாணையின்படி வழங்கப்பட்டுள்ள அதிகார வரம்பிற்குட்பட்டு 07.08.2025 வியாழக்கிழமை அன்று தென்காசி மாவட்டத்தில் உள்ள பள்ளி, கல்லூரிகளில் நடைபெற்று வரும் முக்கியத் தேர்வுகளுக்கு இடையூறு ஏற்படாத வகையில் அனைத்து மாநில அரசு அலுவலகங்களுக்கும், நிறுவனங்களுக்கும் உள்ளூர் விடுமுறை நாளாக அறிவித்து உத்தரவிடப்பட்டுள்ளது. மேற்குறிப்பிட்ட நாளில்அரசு தேர்வுகள் ஏதுமிருப்பின் சம்பந்தப்பட்ட தேர்வு எழுதும் பள்ளி மாணவர்கள்,தேர்வு தொடர்பாக பணியாற்றும் ஆசிரியர்கள் மற்றும் அலுவலர்களுக்கு இந்த உள்ளூர் விடுமுறை பொருந்தாது.

மேற்படி உள்ளூர் விடுமுறையானது செலவாணி முறிச்சட்டம் 1881 (Under Negotiable Instrument Act – 1881) ன் கீழ் அறிவிக்கப்படவில்லை என்பதால் வங்கிகளுக்கு இவ்விடுமுறை பொருந்தாது. இம்மாவட்ட கருவூலம் மற்றும் அனைத்து சார்நிலைக் கருவூலங்களும் குறைந்தபட்ச பணியாளர்களைக் கொண்டு அரசு காப்புகள் தொடர்பாக அவசரப் பணிகளை கவனிப்பதற்காக செயல்படும் எனவும் தெரிவிக்கப்படுகிறது.

மேலே குறிப்பிட்டுள்ள விடுமுறையை ஈடுசெய்யும் வகையில் (23.08.2025) சனிக்கிழமை அன்று தென்காசி மாவட்டத்திற்கு வேலை நாளாக அறிவிக்கப்படுகிறது என மாவட்ட ஆட்சித் தலைவர் ஏ.கே.கமல்கிஷோர் தெரிவித்துள்ளார்.

## தென்காசி மாவட்டத்தில்

# தமிழ்நாடு தூய்மை பணியாளர்கள் நலவாரிய ஆய்வுக்கூட்டம்: நலவாரிய தலைவர் ஆறுச்சாமி தலைமையில் நடைபெற்றது



**தென்காசி ஆக.02:**

தென்காசி மாவட்ட ஆட்சியரக கூட்டரங்கில் தமிழ்நாடு தூய்மை பணியாளர்கள் நலவாரிய ஆய்வுக்கூட்டம் மற்றும் நலத்திட்ட உதவிகள் வழங்கும் நிகழ்ச்சி மாவட்ட ஆட்சித் தலைவர் ஏ.கே.கமல்கிஷோர், முன்னிலையில் தமிழ்நாடு தூய்மை பணியாளர்கள் நலவாரிய தலைவர் டாக்டர். திப்பம்பட்டிவெ.ஆறுச்சாமி தலைமையில் நடைபெற்றது.

தென்காசி மாவட்ட ஆட்சியரக கூட்டரங்கில் தமிழ்நாடு தூய்மை பணியாளர்கள் நலவாரிய ஆய்வுக்கூட்டம் மற்றும் நலத்திட்ட உதவிகள் வழங்கும் நிகழ்ச்சி மாவட்ட ஆட்சித் தலைவர் ஏ.கே.கமல்கிஷோர், முன்னிலையில் தமிழ்நாடு தூய்மை பணியாளர்கள் நலவாரிய தலைவர் டாக்டர். திப்பம்பட்டிவெ.ஆறுச்சாமி, துணைத் தலைவர் கனிமொழி பத்மநாபன் ஆகியோர் தலைமையில் நடைபெற்றது.

இக்கூட்டத்தில் 04 தூய்மை பணியாளர்களுக்கு ரூ.6,55,000/- மதிப்பிலான பல்வேறு நலத்திட்ட உதவிகள், 50 பயனாளிகளுக்கு அடையாள அட்டைகள் 50 பயனாளிகளுக்கு காப்பீட்டு அட்டைகளு ம்வழங்கப்பட்டது.

மேலும், இந்நிகழ்ச்சியில் மாவட்ட ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியின நலஅலுவலர் (பொ) ராமச்சந்திரன், மாவட்டமேலாளர் (தாட்கோ) ராஜ்குமார், தமிழ்நாடு தூய்மைப் பணியாளர்கள் நலவாரிய மாநில உறுப்பினர் மூக்கையா, உதவி மேலாளர் அருணாசலம், செய்தி மக்கள் தொடர்பு அலுவலர் எடிசன் மற்றும் வட்டார வளர்ச்சி அலுவலர்கள், பேரூராட்சி அலுவலர்கள், மாநில தூய்மை பணியாளர் நலவாரிய உறுப்பினர்கள் மற்றும் தாட்கோ அலுவலக பணியாளர்கள் மற்றும் அரசு அலுவலர்கள் ஆகியோர் கலந்து கொண்டனர்.

# திருச்செந்தூர் சுப்பிரமணிய சுவாமி கோவிலில் ஜூலை மாத உண்டியல் வருவாய் ரூ.3.84 கோடி



**திருச்செந்தூர் ஆக.02-**

திருச்செந்தூர் கோவிலில் ஜூலை மாதம் உண்டியல் காணிக்கை மூலம் ரூ.3.84 கோடி பணம் மற்றும் 1 கிலோ 530 கிராம் தங்கமும், 22 கிலோ 500 கிராம் வெள்ளியும் கிடைத்துள்ளது.

திருச்செந்தூர் சுப்பிரமணிய சுவாமி கோவிலில் பக்தர்கள் உண்டியலில் செலுத்தும் காணிக்கை மாதந்தோறும் எண்ணப்படுகிறது. அவ்வகையில் ஜூலை மாத உண்டியல் வருமானம் நேற்று கணக்கிடப்பட்டது. கோவில் தக்கார் அருள்முருகன் தலைமையில், இணை ஆணையர் ஞானசேகரன் முன்னிலையில் உண்டியல்கள் திறக்கப்பட்டு, அதில் உள்ள பணம் மற்றும் நகைகள் எண்ணப்பட்டன. கோவில் வளாகத்தில் உள்ள மண்டபத்தில் வைத்து காணிக்கை எண்ணும் பணி நடைபெற்றது. கோவில் முதுநிலை கணக்கு அலுவலர் ராஜாராமன், உதவி ஆணையர் நாகவேல், நாகர்கோவில் உதவி ஆணையர் தங்கம், கண்காணிப்பாளர் ரோகிணி, ஆய்வர் செந்தில்நாயகி, பொதுமக்கள் பிரதிநிதிகள் வேலாண்டி, கருப்பன் மற்றும் சிவகாசி பதினெண் சித்தர் மடம் குருகுல வேத பாடசாலை உழவார பணிக் குழுவினர் மற்றும் கோவில் பணியாளர்கள் இப்பணியில் ஈடுபட்டனர்.உண்டியல்களில் காணிக்கையாக ரூ.3 கோடியே 84 லட்சத்து 64 ஆயிரத்து 297 கிடைத்துள்ளது. அதேபோல் 1 கிலோ 530 கிராம் தங்கமும், 22 கிலோ 500 கிராம் வெள்ளியும், 833 வெளிநாட்டு கரன்சிகளும் பக்தர்கள் காணிக்கையாக செலுத்தியிருந்தனர்.

## தூத்துக்குடி மாவட்டத்தில்

# சமூக தணிக்கை சிறப்பு கிராம சபை கூட்டம்



**திருச்செந்தூர்,ஆக.02-**

தூத்துக்குடி மாவட்டத்தில் மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதி திட்டத்தின் சமூக தணிக்கை சிறப்பு கிராம சபை கூட்டம் 18 கிராம ஊராட்சிகளில் நடந்தது.

இதில் 2024-25ம் நிதியாண்டில் மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதி திட்டத்தின் கீழ் நடைபெற்ற பணிகளுக்கான சமூக தணிக்கை 10 ஊராட்சி ஒன்றியங்களில் உள்ள 18 கிராம ஊராட்சிகளில் ஜுலை - 28ம் தேதி முதல் ஆகஸ்ட் - 01ம்தேதி வரை வட்டார வள பயிற்றுநர்கள் மற்றும் கிராம வள பயிற்றுநர்களால் சமூகதணிக்கை மேற்கொள்ளப்பட்டு அதற்கான அறிக்கையினை சிறப்பு கிராம சபை கூட்டத்தில் ஒப்புதல் பெறப்பட்டது.

கிராமசபை கூட்ட நடவடிக்கைகளை நிர்ணய் செயலியில் பதிவேற்றம் செய்யப்பட்டது. கோவில்பட்டி ஊராட்சி ஒன்றியம் இடைசெவல் கிராம ஊராட்சியில் நடந்த சிறப்பு கிராம சபை கூட்டத்திற்கு கூட்டத் தலைவர் பாலம்மாள் தலைமை வகித்தார். மண்டல துணை வட்டார வளர்ச்சி அலுவலர் சுமிதா, சமூக தணிக்கை வட்டார வள பயிற்றுநர் செல்வகுமார் ஆகியோர் முன்னிலை வகித்தனர்.

ஊராட்சி செயலர் ஆதிலட்சுமி அனைவரையும் வரவேற்றார். இதில் தூத்துக்குடி மாவட்ட சமூக தணிக்கை வட்டாரவள பயிற்றுநர் மோகன் கலந்து கொண்டு சமூக தணிக்கை அறிக்கை தொடர்பாக பொதுமக்களுடன் கலந்துரையாடல் செய்தார். இதில் சமூகத்தணிக்கை அறிக்கை மீது கிராம சபையில் விவாதிக்கபட்டு ஒப்புதல் பெறப்பட்டது.

இதில் கிராம வள பயிற்றுநர்கள் சுதா, சுகன்யா, முனியராஜலட்சுமி, கௌசல்யா பணித்தளப் பொருப்பாளர்கள், உள்பட 100 நாள் வேலை திட்ட பணியாளர்கள் பலர் கலந்து கொண்டனர். முடிவில் திட்ட ஒருங்கிணைப்பாளர் ராமலட்சுமி நன்றி கூறினார். இதேபோல் கோவில்பட்டி ஒன்றியம் சத்திரப்பட்டி உள்பட தூத்துக்குடி மாவட்டத்தில் 10 ஊராட்சி ஒன்றியங்களில் உள்ள 18 கிராம ஊராட்சிகளில் சமூகதணிக்கை சிறப்பு கிராம சபை கூட்டம் நடந்தது.

## சங்கரன்கோவிலில்

# விவசாயிகள், வியாபாரிகள் பொருளீட்டு கடன் குறித்த விழிப்புணர்வு கூட்டம்



சங்கரன்கோவில். ஆக.02-

வேளாண் விற்பனை மற்றும் வேளாண்மை வணிகத்துறையின் கீழ் செயல்படும் சங்கரன்கோவில் ஒழுங்குமுறை விற்பனைக்கூடத்தில் வைத்து விவசாயிகள், வியாபாரிகள் பொருளீட்டுக்கடன் விழிப்புணர்வு கூட்டம் நடந்தது. கூட்டத்திற்கு விற்பனைக்கூட கண்காணிப்பாளர் இராஜலிங்கம் தலைமை வகித்தார். மேற்பார்வையாளர் முத்துக்குட்டி முன்னிலை வகித்தார். கூட்டத்தில் தென்காசி மாவட்ட வேளாண்மை வணிக துணை இயக்குநர் வசந்தி, திருநெல்வேலி விற்பனைக்குழு செயலாளர் எழில் மற்றும் இராஜபாளையம் சவுத் இன்டியன் பேங்க் மேலாளர் இராம்குமார் ஆகியோர் சிறப்பு அழைப்பாளர்களாக கலந்து கொண்டு பேசினர். இந்த கூட்டத்தில் விவசாயிகள் தங்கள் வருமானத்தை இரட்டிப்பாக்கவும், தங்கள் விளைபொருள்களை நல்ல விலையில் விற்கவும், விலை வீழ்ச்சி அடையும் காலங்களில் குடோன்களில் சேமித்து வைத்தும், அவசர பணத்தேவைக்கு விவசாயிக்கு ஐந்து வட்சம் வரை உடனடி கடனுதவி மற்றம் ஒரு கோடி வரை வங்கியின் மூலமாக குறைந்த வட்டியில் பொருளீட்டுக்கடன் பெறுவதற்கான நடைமுறைகள் பற்றி கூறப்பட்டது. இக்கூட்டத்தில் ஏராளமான விவசாயிகள், வியாபாரிகள் உட்பட பலர் கலந்துகொண்டனர். முடிவில் சந்தை பொறுப்பாளர் விக்னேஷ் நன்றி கூறினார்.

# பழைய குற்றாலம் ஹில்டன் மெட்ரிக் மேல்நிலைப்பள்ளி சாதனை



**குற்றாலம் ஆக.02:**

பழைய குற்றாலம் ஹில்டன் மெட்ரிக் மேல்நிலைப்பள்ளி மாணவன் முதலிடம் பெற்று சாதனை படைத்துள்ளார்.

இந்திய அரசால் ஆண்டு தோறும் இளம் உள்ளங்களின் படைப்பாற்றல் திறன்களை வெளிக் கொணரும் விதமாக 'ஊக்கம் தரும் விருது' வழங்கப்படுகிறது. மாணவர்களின் அறிவியல் ஆர்வத்தை ஊக்குவிக்கும் இத்திட்டத்தில் ஹில்டன் பள்ளி ஏழாம் வகுப்பு மாணவன் ஸ்டீவ் ஜெர்சன் மாவட்ட அளவில் முதலிடம் பெற்று சாதனை படைத்துள்ளார்.

'உணவு பதப்படுத்துதல் துறையில் வண்ண உணரி மூலம் சிறந்த உணவுப் பொருட்களை தேர்ந்தெடுத்தல்' என்ற தலைப்பில் படைப்பை வெளிப்படுத்தி முதலிடம் பெற்ற மாணவனுக்கு பரிசுத் தொகை ரூ 10,000மும், விருதும் வழங்கப்பட்டது. விருது பெற்ற மாணவனை ஹில்டன் பள்ளி தாளாளர் ஆர்.ஜே.வி.பெல், செயலாளர் கிரேஸ் கஸ்தூரி பெல், பள்ளியின் முதல்வர் மோன்சி கே மாத்தாய் மற்றும் ஆசிரியர்கள் பாராட்டினர்.

# செங்கோட்டை எஸ்.எம்.எஸ்.எஸ். அரசு ஆண்கள் மேல்நிலைப் பள்ளியில் போதை விழிப்புணர்வு



**செங்கோட்டை ஆக.02:**

செங்கோட்டை வட்ட சட்டப் பணிகள் குழுவும் செங்கோட்டை எஸ். எம். எஸ். எஸ். அரசு ஆண்கள் மேல்நிலைப் பள்ளியும் இணைந்து மாணவர்கள் மத்தியில் போதை விழிப்புணர்வு மற்றும் சட்ட விழிப்புணர்வு நிகழ்ச்சி நடைபெற்றது.

வட்ட சட்டப் பணிகள் குழுவின் தலைவர் குற்றவியல் நீதித்துறை நடுவர் இளையராஜா தலைமையில் பள்ளியின் தலைமை ஆசிரியர் முன்னிலையில் மற்றும் ஆசிரிய பெருமக்கள் மற்றும் மாணவர்கள் மத்தியில் நடைபெற்றது. நிகழ்ச்சியை முன்னாள் மாணவர்கள் சங்கம் ஏற்பாடு செய்திருந்தது.

இந்த சட்ட விழிப்புணர்வு நிகழ்ச்சியில் செங்கோட்டை வழக்கறிஞர்கள் சங்கத்தின் தலைவர் ஆதிபாலசுப்பிரமணின், செயலாளர் சாமி, முன்னாள் இணைச் செயலாளர் கார்த்திகை ராஜன்,வழக்கறிஞர்கள் சிதம்பரம், எம். ஆர்.கே. வேல், சுடர் முத்தையா , மாலதி, கலீலா, நல்லையா, குமார் , அபு, சட்ட மாணவர் மரிச்செல்வம், முன்னாள் மாணவர் சங்கத்தின் உடைய தலைவர் நேரு, செயலாளர் நல்நூலகர் ராமசாமி ஆகியோர் கலந்து கொண்டு மாணவர்களுக்கு சட்டம் சார்ந்த மற்றும் போதைப் பொருட்களால் ஏற்படக்கூடிய தீமைகளை எடுத்து கூறினர் ஏற்பாடு செய்திருந்த முன்னாள் மாணவர் சங்கத்திற்கும் மற்றும் பள்ளியின் நிர்வாகத்திற்கு வட்ட சட்ட பணிகள் குழுவின் செயலர் ஜெயராம் நன்றி கூறினார்.

# குண்டாறு அணைப்பகுதியில் உணவக கட்டிடம்: முதல்வர் மு.க.ஸ்டாலின் காணொளி வாயிலாக திறந்து வைத்தார்



**தென்காசி ஆக.02:**

தமிழ்நாடு முதலமைச்சர் தமிழ்நாடு சுற்றுலாத் துறையின் சார்பில் சென்னை தலைமைச் செயலகத்தில் நடைபெற்ற நிகழ்ச்சியில், தென்காசி மாவட்டம் செங்கோட்டை வட்டம் புதூர் (செ) பேரூராட்சிக்குட்பட்ட குண்டார் அணைப்பகுதியில் அமைக்கப்பட்டுள்ள தளங்கள், வரவேற்புமையம், உணவ க க் க ட் டி ட த் தினை காணொளி காட்சி வாயிலாக திறந்து வைத்ததைத் தொடர்ந்து தென்காசி மாவட்டம் குண்டார் அணைப்பகுதியில் புதிதாக கட்டப்பட்டுள்ள உணவக கட்டடத்தினை கலெ்டர் ஏ.கே.கமல்கிஷோர், திறந்து வைத்து குத்துவிளக்கேற்றி பார்வையிட்டார். பின்னர் கலெ்டர் ஏ.கே.கமல்கிஷோர், தெரிவித்ததாவது,

தென்காசி மாவட்டத்தில் சுற்றுலாத்துறையை மேம்படுத்தும் விதமாக தமிழ்நாடு முதலமைச்சர் தென்காசி மாவட்டம் செங்கோட்டை வட்டம் புதூர்(செ) பேரூராட்சிக்குட்பட்ட குண்டார் அணைப்பகுதியில் ரூ.1.50 கோடி மதிப்பீட்டில் புதிதாக அமைக்கப்பட்டுள்ள தளங்கள், வரவேற்புமையம், உணவகக்கட்டிடத்தினை பொதுமக்களின் பயன்பாட்டிற்காக திறந்து வைத்துள்ளார்.

எனவே, அணைப் பகுதிக்கு வரும் சுற்றுலா பயணிகள் அனைவரும் உணவகத்தை பயன்படுத்திக் கொள்ளலாம்.

இந்நிகழ்ச்சியில், உதவி சுற்றுலா அலுவலர் சந்திரமோகன், முதுநிலை மேலாளர் (தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகம்) கார்த்திக் அமர்நாத், மேலாளர் (தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகம்) சுரேஷ்குமார், உதவி பொறியாளர் விஜில்சிங், புதூர்(செ) பேரூராட்சிமன்ற தலைவர் ரவி சங்கர், புதூர் (செ) பேரூராட்சி செயல் அலுவலர் குமார் பாண்டியன், செய்தி மக்கள் தொடர்பு அலுவலர் எடிசன், உதவி மக்கள் தொடர்பு அலுவலர் (செய்தி) ராமசுப்பிரமணியன் மற்றும் அரசு அலுவலர்கள், உள்ளாட்சி அமைப்பு பிரதிநிதிகள், பொதுமக்கள் ஆகியோர் கலந்து கொண்டனர்.

# சுரண்டை எஸ்.ஆர்.ஸ்கூல் ஆப் எக்ஸலன்ஸ் பள்ளியில் நண்பர்கள் தின விழா



**சுரண்டை ஆக.02:**

சுரண்டை எஸ் ஆர் ஸ்கூல் ஆப் எக்ஸலன்ஸ் பள்ளியில் பாலர் வகுப்பு குழந்தைகளுக்கு "நண்பர்கள் தினம் " கொண்டாடப்பட்டது. குழல்வாய்மொழி அம்மாள் சிவன் நாடார் அறக்கட்டளை நிறுவனத்தின் நிறுவனர் சிவ பபிஸ்ராம், பள்ளியின் செயலர் சிவ டிப்ஜினிஸ் ராம், முதல்வர் பொன் மனோன்யா, புஷ்பா மற்றும் தலைமை ஆசிரியர் மாரிக்கனி ஆகியோர் தலைமை வகித்தனர்.இவ்விழாவில் மழலைகளுக்கு நட்பு, நண்பர்கள் பற்றி ஆசிரியை அழகு மாரி எடுத்து கூறினார். குழந்தைகளுக்குள் கிரீடம் அணிவித்து மகிழ்ந்தனர்.நண்பர்கள் பற்றி பாடல்கள் பாடி குழந்தைகள் மகிழ்ந்தனர். நண்பர்கள் பற்றிய கதைகள் ஆசிரியை சோபியா ராணி கூறினார். ஆசிரியை தங்க புஷ்பா, அருள் நிகிலா ஆகியோர் மாணவர்களை ஒருங்கிணைத்தனர்



**தென்காசி தெற்கு மாவட்டம் கலைஞர் அறிவாலயத்திற்கு வருகை தந்த ம.தி.மு. க. துணைப் பொதுச் செயலாளர் ராஜேந்திரன், மாவட்ட செயலாளர்கள் ராம உதயசூரியன், சுதா (எ) பாலசுப்பிமணியன் ஆகியோரை மாவட்ட திமுக செயலாளர் வே.ஜெயபாலன் சால்வை அணிவித்து வரவேற்றார். இதில் வழக்கறிஞர் சுப்பையா, ஒன்றிய செயலாளர்கள் முருகன், மாரி செல்வம், செல்வ சக்தி வடிவேல்,நகர செயலாளர் கார்த்திக் மற்றும் ம.தி. மு.க.நிர்வாகிகள் பலர் கலந்து கொண்டனர்.**



**கன்னியாகுமரி மாவட்டம் வடசேரியில் நடைபெற்ற உங்களுடன் ஸ்டாலின் திட்ட முகாமில், வேளாண்மை துறை சார்பில் உடனடியாக நலத்திட்ட உதவிகளை மாவட்ட கண்காணிப்பு அலுவலர் ஹனீஷ் சாப்ரா, கலெக்டர் ஆர்.அழகுமீனா ஆகியோர் வழங்கினர். உடன் நாகர்கோவில் மாநகராட்சி ஆணையர் நிஷாந்த் கிருஷ்ணா உட்பட பலர் உள்ளனர்.**

